# ஃபாரென்ஹீட் 451

## ரே பிராட்பரி

ஆங்கிலத்திலிருந்து தமிழில்

வெ. ஸ்ரீராம்

பின்னுரை

டாக்டர் இ. அண்ணாமலை

க்ரியா

***ஃபாரென்ஹீட் 451***
***புத்தகத் தாள் தீப்பற்றி எரியும் வெப்பநிலை.***

‘‘கோடு போட்ட தாள் உனக்குக் கொடுக்கப்பட்டால்
வேறு திசையில் எழுது.’’

- ஹ்வான் ரமோன் ஹிமெனெஸ்
(Juan Ramon Jiménez)

## பாகம் 1

### கணப்பும் சலமாண்டரும்[1]

தீ வைத்து எரிப்பது மகிழ்ச்சியாக இருந்தது.

பொருள்கள் தீக்கிரையாவதைப் பார்ப்பது, அவை கறுத்துப்போவதையும் மாற்றம் அடைவதையும் பார்ப்பது ஒருவித விசேஷ மகிழ்ச்சியை அளித்தது. தன் கை பற்றிக்கொண்டிருந்த பித்தளைக் குழாயின் குவிந்த வாயும், நச்சு மண்ணெண்ணெயைப் பரவலாகத் துப்பிக்கொண்டிருந்த இந்தப் பெரிய மலைப்பாம்பும் அவனுடைய மண்டையின் இரத்த நாளங்களை விண்விண்ணென்று தாக்கின. வரலாற்றின் இடிபாடுகளையும் சிதைவுகளையும் வீழ்த்திய தீக்கொழுந்துகளின் சிம்பொனிகள் அனைத்தையும் நிகழ்த்தும் ஒருவருடைய கைகளைப் போல இருந்தன அவனுடைய கைகள். குறியீடாக இருந்த எண் 451 பொறிக்கப்பட்ட தலைக்கவசம் சுரணையற்ற அவனுடைய தலைமேல் இருக்க, அடுத்து வரப்போவதைப் பற்றிய நினைப்பில் ஆரஞ்சு நிறச் சுவாலைகளாக இருந்த கண்களுடன் தன்னுடைய தீயூட்டியை அவன் சுண்டினான்; இரவு நேர வானத்தைச் சிவப்பும் மஞ்சளும் கருப்புமாக எரித்த அகோரத் தீயில் அந்த வீடு எம்பித் துள்ளியது. மின்மினிப்பூச்சிக் கூட்டத்தின் மத்தியில் அவன் பெருமிதத்துடன் நடந்தான். எல்லாவற்றையும்விட, பழைய நகைச்சுவைத் துணுக்கு ஒன்றில் வருவதைப் போல, புறா இறக்கைகளாகப் படபடத்த புத்தகங்கள் வீட்டு வாசலின் முன்பும் புல்தரையிலும் அழிந்துகொண்டிருக்கும்போது, எரியும் சூளைக்குள் ஜவ்வு மிட்டாய் குச்சியைத் திணிக்க விரும்பினான். பொறி தெறிக்கும் சுழல்களாகப் புத்தகங்கள் மேலெழும்பிச் சென்று, தீயாய் இருண்டுவிட்டிருந்த காற்றில் அடித்துச் செல்லப்பட்டன.

சுட்டுப் பொசுக்கப்பட்டு, சுவாலையால் பின்னுக்கு விரட்டப்பட்ட எல்லா மனிதர்களின் பயங்கரமான இளிப்பை மோன்டாகும் இளித்தான்.

---

[1] சலமாண்டர்: நெருப்பினால் பாதிக்கப்படாத விலங்கு என்று இலக்கியங்களிலும் புராணங்களிலும் கூறப்படும், பல்லி போன்ற சிறிய விலங்கு.

தீயணைப்பு நிலையத்துக்குத் திரும்பிப் போனவுடன் நாடோடிப் பாடகன் போல இருந்த தன்னுடைய கறுத்துப்போன முகத்தைக் கண் ணாடியில் பார்த்து, தனக்குத் தானே கண்ணடித்துக்கொள்வான் என்பது அவனுக்குத் தெரியும். பிறகு, தூங்கப்போகும்போது இருட்டில் அதே பயங்கரமான சிரிப்பு இன்னமும் அவனுடைய முகத்தின் தசைகளைப் பற்றியிருப்பதை உணர்வான். அது ஒருபோதும் அவனை விட்டுப் போனதே இல்லை. அந்தச் சிரிப்பு, அவனுக்கு ஞாபகம் இருந்தவரை ஒரு போதும் அவனை விட்டுப் போனதேயில்லை.

கருவண்டு நிறத்திலிருந்த அவனுடைய கறுப்புத் தலைக்கவசத்தைக் கழற்றி மாட்டிவிட்டு அதைப் பளபளப்பாக ஆக்கத் துடைத்தான். தன் னுடைய தீக்காப்புக் கோட்டைச் சீராக மாட்டினான்; பூவாளிக் குழா யடியில் தாராளமாகக் குளித்தபின், விசிலடித்துக்கொண்டே பாக்கெட்டு களில் கையை நுழைத்துக்கொண்டு, தீயணைப்பு நிலையத்தின் மேல்தளத் தைக் குறுக்காகக் கடந்து, தரைத் திறப்பு வழியே கீழே விழுந்தான். கடைசித் தருணத்தில், விபத்து நேர்வது நிச்சயம் என்று தெரிந்தவுடன், பாக்கெட்டிலிருந்து கைகளை வெளியே எடுத்து, தங்க நிறத்திலிருந்த கம்பத்தைப் பிடித்துக்கொண்டு, தான் கீழே விழுவதைத் தடுத்தான். கிறீச்சிட்டபடி வழுக்கி வந்து, கீழே இருந்த கான்கிரீட் தரைக்கு ஒரு அங்குலத்துக்கு மேல் குதிகால் இருக்கும்போது நின்றுவிட்டான்.

தீயணைப்பு நிலையத்திலிருந்து வெளியே வந்து, நள்ளிரவுத் தெரு வழியாகச் சுரங்க ரயில் நிலையம்வரை சென்றான்; அங்கே, காற்றின் உந்துவிசையில் செல்லும் ஓசையற்ற ரயில், உயவு எண்ணெய் தடவப் பட்ட சுரங்கப்பாதைத் தடத்தில் சத்தமின்றி வழுக்கிச் சென்று, புறநகர்ப் பகுதியை நோக்கி மேலேறிப் போன, சந்தன நிறத் தரைக்கல் பதித்த நகரும் படிக்கட்டுக்கு, வெதுவெதுப்பாக வீசிய காற்றில், அவனைக் கொண்டுபோய்ச் சேர்த்தது.

சலனமற்று இருந்த இரவில், விசிலடித்துக்கொண்டே இருந்த தன்னை அந்த நகரும் படிக்கட்டு மென்மையாகத் தூக்கிச் செல்லும்படி விட்டான். குறிப்பாக எதைப் பற்றியும் எவ்விதச் சிந்தனையுமின்றி, தெரு முனைவரை நடந்தான். தெரு முனையைச் சென்றடையும் முன்பாகவே, காற்றலை ஏதோ ஒன்று எங்கிருந்தோ வீசியதைப் போல, யாரோ தன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டதைப் போலத் தன் வேகத்தைக் குறைத்தான்.

நட்சத்திரங்களின் ஒளியில் தன் வீட்டை நோக்கிப் போய்க்கொண் டிருந்த அவனுக்கு, கடந்த சில இரவுகளாகவே, தெரு முனையில் இருந்த நடைபாதையில் முற்றிலும் இனம் தெரியாத ஏதோ சில உணர்ச்சிகள் தோன்றிக்கொண்டே இருந்தன. அந்த முனையில் தான் திரும்புவதற்கு

முந்தையக் கணம்வரை யாரோ அங்கே இருந்ததைப் போலத் தோன்றி யது. யாரோ அங்கே சத்தமின்றிக் காத்திருந்துவிட்டு, அவன் வருவதற்கு ஒரு நொடி முன்புதான் அங்கிருந்து நிழல் ஒன்றில் மறைந்து, அவனைக் கடந்து செல்ல விட்டதைப் போன்ற அசாதாரணமான ஒரு அமைதி அந்தச் சூழ்நிலையை ஆக்கிரமித்ததைப் போல இருந்தது. ஒருவேளை லேசான நறுமணம் ஒன்றை அவனுடைய மூக்கு இனம்கண்டுகொண் டிருந்திருக்கலாம்; அல்லது, அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவ ரால் ஒரு கணத்துக்கு, அந்தக் குறுகிய இடத்தைச் சுற்றிப் பத்து டிகிரிவரை உயர்ந்திருக்கக் கூடிய வெப்பத்தைத் தன் புறங்கைகளின் தோலின் மேல், தன் முகத்தில் ஒருவேளை அவன் உணர்ந்திருக்கலாம். அவனால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒவ்வொரு முறை அவன் திரும்பிய போதும், யாரும் இல்லாத, வளைந்து சென்ற, வெண்ணிற நடை பாதையை மட்டுமே பார்த்தான். ஒரே ஒரு நாள் இரவில், அவன் தன் னுடைய கண்களை இடுக்கிக்கொண்டு பார்க்கவோ பேசவோ முயல் வதற்கு முன், புல் தரையில் ஏதோ விரைந்து மறைவதைப் போலத் தோன்றியிருந்தது.

ஆனால் இன்றிரவோ, கிட்டத்தட்ட நின்றுவிடுவதைப் போல வேகத் தைக் குறைத்தான். தெரு முனையில் அவன் திரும்புவதற்கு முன் அதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த அவனுடைய உள்மனதுக்கு மிக லேசான கிசுகிசுப்புக் கேட்டிருந்தது. சுவாசமா? அல்லது யாரோ அங்கு நிசப்தமாக நின்று காத்துக்கொண்டிருந்ததால் இறுக்கமடைந்துவிட்டிருந்த சூழலா அது?

தெரு முனையில் திரும்பினான்.

நிலா வெளிச்சத்திலிருந்த நடைபாதைமேல் இலையுதிர் காலத்தின் காய்ந்த இலைகள் விழுந்து, அங்கே வீசிய காற்றிலும், பறந்து சென்ற இலைகளின் ஓட்டத்திலும் தூக்கிச் செல்லப்பட்டதைப் போலத் தோன்றிய ஒரு இளம் பெண், தான் நடந்துகொண்டிருந்தாலும் சறுக்கியபடி, நகரும் நடைபாதை ஒன்றில் பொருந்தி நிற்பதைப் போலத் தோன்றினாள். இலைகளைக் கிளறி, அவற்றைச் சுழலச் செய்த காலணிகளைப் பார்ப் பதற்காகச் சற்றே தலையைக் குனிந்தபடி இருந்தாள். மெலிந்த, பால் போன்ற வெண்மையான முகம்; சலிப்புறாத ஆர்வத்துடன் எல்லாவற்றை யும் தொட்டுப்பார்க்கும் மென்மையான ஒருவிதப் பசி அந்த முகத்தில் இருந்தது. கிட்டத்தட்ட லேசான வியப்பு அவள் பார்வையில் தென் பட்டது; உலகின் மேல் அந்தக் கரிய விழிகள் குவிந்திருந்த விதத்தில் எந்த அசைவும் அவற்றிடமிருந்து தப்பவில்லை. அவளுடைய ஆடை வெண்மையாக இருந்தது, கிசுகிசுத்தது. அவள் நடக்கும்போது அவ ளுடைய கைகளின் அசைவைக்கூடத் தான் கேட்பதைப் போல அவன்

நினைத்தான்; இதோ, இப்போது நடைபாதையின் நடுவில் நின்றபடி காத்துக்கொண்டிருந்த மனிதனிடமிருந்து தான் ஒரு வினாடி தூரத்தில் தான் இருக்கிறோம் என்பதை அறிந்தவுடனேயே திரும்பிய அவளுடைய முகத்தின் கள்ளமற்ற சலனத்தின் அந்த மிக நுண்ணிய ஒலி.

தலைக்கு மேலே இருந்த மரங்கள் காய்ந்த இலைகளைப் பொழிந்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தின. நடப்பதை நிறுத்திவிட்டு ஒருவேளை வியப்பில் பின்வாங்கிவிடுவாளோ என்பதைப் போலத் தோன்றினாலும், அந்தப் பெண் தன்னுடைய ஆழ்ந்த கரிய, பளபளக்கும், துடிப்பான கண்களால் மோன்டாகைப் பார்த்தபடி நின்றாள்; அற்புதமாக எதையோ தான் சொல்லிவிட்டதைப் போல அவன் உணர்ந்தான். ஆனால் ‘ஹலோ’ என்று சொல்வதற்கு மட்டும் தன்னுடைய வாய் அசைந்தது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அவனுடைய கைகளிலிருந்த சலமாண்டர் உருவத்தையும், அவன் நெஞ்சின் மேல் இருந்த ஃபீனிக்ஸ் பறவை வில்லையையும் பார்த்து வசியப்பட்டதைப் போல அவள் தோன்றவே, அவன் மீண்டும் பேசினான்.

“நீ புதிதாக இந்தத் தெருவுக்கு வந்தவள் இல்லையா?” என்றான்.

“நீங்கள்—”, அவனுடைய தொழில்ரீதியினால் ஆன அடையாளச் சின்னங்களிலிருந்து பார்வையை உயர்த்தினாள். “தீயணைப்பவர்”. அவளுடைய குரல் தேய்ந்துகொண்டே போயிற்று.

“அதை எவ்வளவு விசித்திரமாக நீ சொல்கிறாய்.”

“நானா—கண்களைத் திறக்காமலேயே எனக்கு அது தெரிந்திருக்கும்,” என்றாள் அவள், மெதுவாக.

“என்ன—மண்ணெண்ணெய் வாடைதானே? என் மனைவியும் எப்போதும் இதே புகார்தான்,” என்றபடி சிரித்தான். “அதை ஒருபோதும் முழுமையாகக் கழுவிவிட முடியவில்லை.”

“இல்லை, உங்களால் முடியாது”, என்றாள் அவள், வியப்பு மேலிட.

அவனைச் சுற்றிச்சுற்றி வந்து, மேலும் கீழுமாக அவனைப் புரட்டிப் பார்த்து, சத்தம் எதுவும் இல்லாமல் அவனை உலுக்கி, அவனுடைய பாக்கெட்டுகளைக் காலிசெய்து—தான் அசையாமலேயே இவை அனைத்தையும் அவள் செய்ததைப் போல அவன் உணர்ந்தான்.

“மண்ணெண்ணெய்,” மௌனம் நீடித்துவிட்டதால் அவன் சொன்னான்: “எனக்கு ஒரு வாசனைத் திரவியம்.”

“உண்மையிலேயே அது அப்படித்தான் தோன்றுகிறதா?”

“நிச்சயமாக. ஏன் கூடாது?”